விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 3 றவி, அவ் 1) இதழ் 334
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16 1-82

புகழ்பெற்ற ருசிமிக்க
ஸ்பெசல் தயாரிப்பு

ஃ இரட்டைப் புலிமார்க் அப்பளம்

ஃ ஸ்பெசல் அம்மாமி அப்பளம்

ஒருமுறை வாங்கி உபயோகித்தால்
உண்மை விளங்கும்

**கிருஷ்ணா அப்பளம்
தொழிற்சாலை**

புலவனூர் ஒழுங்கை, கல்வியங்காடு.
1985

## வெங்கட்ராமன் பாதுகாப்பு அமைச்சர்!

புதுடில்லி, ஜன. 15

இந்திய மத்திய அமைச்சரவையில் பல பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் பிரதம மந்திரியின் பொறுப்பிலிருந்த பாதுகாப்பு அமைச்சர் பதவி நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய நிதியமைச்சராக பிரணப் முகர்ஜி நியமிக்கப்பட்டுள்ளார். பெற்றோலியம், கைத்தொழில், தொழில், சட்ட, ரயில்வே, பாசனத்

(6ம் பக்கம் பார்க்க)

★ **மட்டக்களப்பு மா. அ. சபை:**

# இராசதுரை பதவி பறிக்கப்பட்டது!

## சபையில் காரசார விவாதம் தலைவர் வெளிநடப்பு!

### 'இராசு'வின் காரணங்களையும் ஏற்க மறுப்பு

(நமது நிருபர் தமிழினியவன்)

**மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபை, தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி தலைமையில் நேற்றுக் கூடியபோது பிராந்திய அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல், இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரை மூன்று கூட்டங்களுக்கு தொடர்ந்து சமுகமளிக்காததால் அவர் அங்கத்துவத்தை இழந்துவிட்டதாக தலைவர் அறிவித்தார்.**

அமைச்சர் இராசதுரை ஒரு எம். பி. என்ற வகையில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபையில் பதவிசால் உறுப்பினர். அவர் கடைசியாக 1981 செப்டம்பர் மாதம் 21—ந் திகதி நடந்த அபிவிருத்திசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அதன் பின்னர் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடந்த கூட்டங்களில் அவர் பங்கு பற்றவில்லை.

**அமைச்சருடைய சமுகமளித்தார்**

நேற்று நடைபெற்ற அபிவிருத்திசபைக்கூட்டத்தில் அமைச்சர் இராசதுரை சமுகமளித்திருந்தார், அப்போது பட்டிருப்பு எம். பி. திரு; பி. கணேசலிங்கம் எழுந்து 1981 டிசம்பர் மாதம் 28—ந் திகதி கடைசியாக நடைபெற்ற அபிவிருத்திசபைக் கூட்டத்திற்கும் அமைச்சர் இராசதுரை சமுகமளிக்காததாலும், தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளாததாலும் இவரின் நிலை என்ன என்பது குறித்து கேள்வி எழுப்பினர்.

**சபை ஏற்கவில்லை**

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் திரு. இராசதுரை கூட்டத்துக்கு வரமுடியாததற்கான காரணங்களைக் கடித மூலம் சபையில் சமர்ப்பித்திருந்தார்.

ஆனாலும் இதனை சபை ஏற்கவில்லை. இக்கடிதத்தை உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பிவைப்பதென்று சபை தீர்மானித்தது.

அமைச்சர் இராசதுரை இன்றைய அபிவிருத்தி சபைக்கூட்டத்திற்கு வந்த போதிலும் அவர் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காததால் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கமுடியாதென்று தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி தெரிவித்தார்.

அப்போது திரு. இராசதுரை எழுந்து கூட்டங்களுக்கு வரமுடியாததற்கான காரணங்களை விளக்கியபோது, சபையிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இவர் சபை ஒழுங்கு விதிகளின்படி உறுப்பினராக பதவிவகிக்க முடியாதென்று வாதிட்டனர். அப்போது ஐ. தே. கட்சிஉறுப்பினர் திரு. க. மாணிக்கம் எழுந்து தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வராத பட்சத்தில்தான் திரு. இராசதுரையின் பதவியைப் பறிக்கமுடியுமென்றார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகம் இவ்விவகாரத்தை சட்டமா அதிபருக்கு அனுப்பி முடிவெடுப்போம் என்று கூறினார். கூட்டணி உறுப்பினர் திரு. அல்பேர்ட் சீவரத்தினம் இது தொடர்பாக தலைவரே முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து நேற்றைய கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ. தே. கட்சி உறுப்பினர்களுக்கிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதனையடுத்து கூட்டத்தை நடத்த முடியாதென்றும், அதனை ஒத்திவைப்பதாகவும் அறிவித்துவிட்டு தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி கூட்டத்திலிருந்தும் வெளியேறினார். அவருடன் சேர்ந்து கூட்டணி உறுப்பினர்களும் சபையைவிட்டு வெளியேறினர்.

ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் அதன் பின்னர் பத்து நிமிடங்கள் வரை சபையிலிருந்துவிட்டு வெளியேறினர். (வெ)

## யாழ். பல்கலைக்கழக சபை அங்கத்தவர்கள்

### மூன்று புதிய முகங்கள்; ஒரு பெண்ணும் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சபையின் புதிய நியமன அங்கத்தவர்களாக திரு. எஸ். கணேசலிங்கம், திருமதி சத்தியபாமா ராஜலிங்கம், திரு. சிவபாதசுந்தரம் ஆகிய மூவரும் இடம்பெற்றுள்ளனர்.

பத்துப்பேர்கொண்ட இச்சபையின் நியமன அங்கத்தவர்கள் விபரம் வருமாறு;

1. முன்னாள் யாழ். அரச அதிபரும், திருமலை அரச அதிபருமான திரு. லயனல் பெர்னாண்டோ. 2. முன்னாள் யாழ். அரச அதிபரும், முன்னாள் நீர்ப்பாசனக,ாணிஅமைச்சின் நிரந்தரச் செயலாளருமான திரு. எம். சிறிகாந்தா. 3. பிரபல கண்வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஆனந்தராஜான் 4. கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் 5. சட்டத்தரணி எஸ். எச். எம். சஹீத். யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா. 7. ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி எஸ். தம்பித்துரை. 8. இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபன இயக்குநர் திரு. எஸ். கணேசலிங்கம், 9. இசைத்துறைப்பட்டதாரி திருமதி சத்தியபாமா ராஜலிங்கம். 10. முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. சிவபாதசுந்தரம்.

யாழ். பல்கலைக் கழக சபையில் ஒரு பெண் நியமனம் பெற்றிருப்பது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று இடங்களில் கொடிகள் அகற்றப்பட்டன

(மாவிட்டபுரம்)

பொங்கல்தினமான நேற்று முன்தினம் மூன்று இடங்களில் கட்டப்பட்டிருந்த கொடிகள் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

காங்கேசன்துறை, அராலி, வட்டுக்கோட்டை ஆகியஇடங்களிலிருந்தே இக்கொடிகள் கைப்பற்றப்பட்டன.

காங்கேசன்துறையில் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலக வளவினுள் அங்குள்ள புதிய நூல்நிலைய மேல் மாடியில் வியாழன் அதிகாலை 4 மணிபோல் கொடியொன்று காட்சியளித்தது. மேற்படி உபஅலுவலககாவலாளிகாலைக் கடனை நிறைவேற்றச்சென்றுவிட்டு திரும்பியபோது இக்கொடி காணப்படவே அவர் காங்கேசன்துறைப் பொலிசாருக்கு தகவல் கொடுத்தார். பொலிசார் சென்று அதனைக் கைப்பற்றினர்.

ஒரு அடி சதுர வடிவம் கொண்ட இக்கொடி மஞ்சள் நிறத்திலும், சிவப்பு நிறத்திலும் இருந்தது. அதில் அம்பு வில், புலி, மீன் கடல், என்பனவும் 'ஈழம்' என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டிருந்தது.

அராலி கறுப்பிட்டி பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் வீதிக்குக் குறுக்காக கொடியொன்று கட்டப்பட்டிருந்தது. அதில் கறுப்பு, சிகப்பு நிறங்களில் எழுத்துக்கள் இருந்தன. தமிழீழப் பிரகடனத்திற்கு

(6ம் பக்கம் பார்க்க)

## தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள தியேட்டர் ஒன்றில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட தீவிபத்து, உரிய நேரத்தில் பொலிசார் அணைக்காதிருந்தால் பல லட்ச ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமிரவு 2வது இறுதிக் காட்சி முடிவடைந்து பார்வையாளர்கள் கலைந்து சென்ற பின்னர் தியேட்டரின் பின்பகுதியில் அமைந்துள்ள இயந்திரப் பகுதியில் மின்சார ஒழுக்கு ஏற்பட்டதன் காரணமாக திடீரென இத்தீவிபத்து ஏற்பட்டதாம். இத்தீவிபத்தினால், திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இரு திரைப்படங்களின் சுருள் பெட்டிகளும் எரிந்து சாம்பராயின். (மா)

# 13 பொலிசார் தற்காலிக வேலைநீக்கம்!

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், காங்கேசன்துறைப்பகுதிகளில் கடந்த ஆண்டு நிகழ்ந்த தாக்குதல், தீவைப்பு சம்பவங்கள்தொடர்பாக, அப்பொழுது கடமையாற்றிய 2 உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், ஒரு பொலிஸ் சார்ஜன்ட், 9 பொலிஸ் கான்ஸ்டபிள்கள், ஒரு ஜீப் சாரதி உட்பட 13 பேர் பொலிஸ் மா அதிபரினால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்,

சுன்னாகத்திலுள்ள கடைகளுக்கு தீவைத்து சேதங்கள் விளைவித்ததாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் ஜயதிலகா, சார்ஜன்ட் ரஞ்சித் கருணாரத்ன, 10 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகிய 12 பேரும், காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர்

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று

(சுழிபுரம்)

ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தமது முப்பத்தைந்து சிஷ்ய யாத்திரிகர்களுடன் வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு இன்று பிற்பகல் நான்கு மணிக்கு வருகை தந்து அருளுரை வழங்குவார். கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும். இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டை வழக்கம்பரை சன சமுக பஜனைச் சபையார் ஏற்பாடு செய்துள்ளனர்.

## இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிதாக நியமிக்கப்பட்ட அமைப்பாளர்களுக்கான கூட்டம் நல்லூரிலுள்ள கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் இன்று காலை நடைபெறவிருக்கிறது. (மா)

## இசைமணி காலமானார்

(சாவகச்சேரி)

'இசைமணி' திரு. வி. நடேசன் நேற்றிரவு மாரடைப்பினால் காலமானார்.

### மணிவாக்கு

மனிதனில் இயல்பாக அமைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி.

மனிதனில் இயல்பாக அமைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே சமயம்.

— சுவாமி விவேகானந்தர்

## நமது நோக்கு

### மக்கள் "மக்ஞகாட்டா"

பட்டாசு இல்லாமல் பால் பொங்குமா? எங்கே பட்டாசு? என்று முறுகிய மனைவியைப் பார்த்து, "தெரியாதா! பட்டாசு கொளுத்துதல் விலக்கப்பட்டிருக்கிறது" என்ருராம் கணவன். "மண்ஞைகட்டி மாப்பிள்ளையே! 'அது எங்கே சொல்லியிருக்கிறது அப்படி? தமிழ்கூறும் நல்லுலகில் தைப்பொங்கலை ஆரவாரிப்பது சீனவெடியும் பட்டாசுமே! உடனே வாங்கிவாருங்கள்" என்பது இல்லக்கிழத்தியின் கட்டளை.

தைப்பொங்கலின் சிறப்பு குன்றிவிடுமென்று அஞ்சிய எமக்கு முந்தநாள் நடைபெற்ற பொங்கல்விழா காதை அடைத்துவிட்டது.

மக்கள் உரிமைகளை உணர்ந்து வாதாடுவதில், சிறப்பாகப் பெண்கள் வாய்வல்லமையுடையவர்களென்பது இங்கு குறிப்பிட்ட சம்பாஷணையில் தெரிகிறது. "பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்". எனவே அவர்களில் அதிகமானவர்கள் சட்டத்தரணிகளாக வேண்டுமென்பதை நாம் விரும்பவில்லை. வீட்டில் இருந்தே இத்துறையில் அவர்கள் வெற்றியீட்டுவதை நாம் காண்கின்ருேம்.

தனி மனித உரிமையை நிலைநாட்டிய பிரிட்டன் 1215ம் ஆண்டிலேயே, நாட்டை ஆண்ட மன்னன் ஜோனிடம் அடிப்படை உரிமைகளைப் பெற்ற சம்பவம் உலக சரித்திரத்தில் பிரசித்திபெற்றது.

இதனை விபரித்து விளக்கிய சாசனமே "மக்ஞகாட்டா' (Magna Carta) சுதந்திரமனிதனின் சிறப்புரிமையை இன்றும் வற்புறுத்துகிறது இதன் 39வது பிரிவு. சட்டத்தை — நாட்டின் சட்டத்தை மீறினலொழிய எந்த மனிதனையும் கைதுசெய்யப் பொலிஸாருக்கு உரிமையில்லை. சட்டத்தின் தீர்ப்பாலொழிய எவரையும் சிறைசெய்யவோ, துன்புறுத்தவோ, வேறெந்தமுறையிலும் அவனுக்கு இடையூறுசெய்தல் முடியாது"

பிரிட்டிஷ் பாராளுமன்றம் இதனைக் காலத்துக்குக் காலம் வேண்டிய திருத்தங்களோடு சுமார் 37 முறை அங்கீகரித்திருக்கின்றது. இருந்தும் சாதாரண பிரிட்டிஷ் பிரஜைக்கு இந்த விபரங்கள் தெரிவதில்லை; தெரியவேண்டியதில்லை. ஏன்? சாதாரண பிரிட்டிஷ் மக்கள் 'சட்டத்தின்' மனித உருவங்கள். நாட்டின் சட்டம், அதன் அமைப்பில் எழுந்த சமூக உணர்வு அவர்களின் இரத்தில் ஊற்றெடுக்கின்ற தென்ருல் அது மிகையாகாது.

சுதந்திரமும் சட்டமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் சட்டத்தின் அமைப்பில், [illegible] மக்கள், சுதந்திர வாழ்வுக்கு [illegible] சட்டத்தை உருவாக்குவது மன்னனாயிருக்கலாம் அல்லது [illegible] லாம்; ஆனல் அச்சட்டம் மக்களுக்கு உரிமையான சுதந்திர

வாழ்க்கைக்கு முரண்பட்டால் அச்சட்டத்தை உதாசீனஞ்செய்யும் உரிமையும் அவர்களுக்குண்டு — ஏன்? நாட்டின்சட்டமொழிய அரசின் சட்டமல்ல, மக்கள் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் சட்டம் அதற்கமைவதே மக்களின் இலட்சிய வாழ்வு; இத்தகைய சுதந்திர தாகமுடையவர்கள் பிரிட்டிஷ் மக்கள்.

பகிரங்க பிரதான வீதியில் பாதுகாப்பாகச் செல்வது பிரஜைகளின் உரிமை; எனவே பீரங்கி, துப்பாக்கிப் பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் சட்டம் உண்டு. தைப்பொங்கல் பண்டிகையைக் குதூகலிக்கும் பட்டாசுபொங்கல் தினத்தில் கொளுத்தப்படாதென்பது நாட்டின் சட்டமா? இல்லை; அவசரகாலச்சட்டமா? அதுவும் இல்லையென்பதே எமது மக்களின் தீர்ப்பு; காரணம் 'பால் பொங்குவதற்கு' பட்டாசு இன்றியமையாதது; பௌத்த விசாக விழாவிற்கு 'சீன விளக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் தமிழர் தைப்பொங்கலுக்கு பட்டாசு வெடி!

மக்கள் சம்மதம் மௌனமான சம்மதம் எந்த நல்ல சட்டத்துக்கும் உண்டு. அதனை அந்த அடிப்படையின் உண்மையை உணராத சட்ட ஆட்சி மக்கள் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் வழி; முந்தநாள் பொங்கலில் இடம்பெற்ற பட்டாசு பரபரப்பு இதற்கு உதாரணமாகும்.

பொங்கல்விழாவின் மகத்துவத்தை உழவர்களே உணரமுடியும்; இருப்பினும் அது இந்தநாட்டில் தமிழ் மக்களின் விழாவாகப்பரிணமித்து வருகின்றது; சைவ மக்களுக்கு மட்டுமல்ல மற்றெந்த மதத்தை அனுட்டிக்கும் தமிழ்மக்கள் அனைவருக்கும் பொதுவான தேசிய விழா இது.

இதனைத் தெரிந்தோ தெரியாமலோ இவ்விழாவுக்கு இடுக்கண்விளைவிக்கும் ஒழுங்குகளை அரசு ஏற்பாடு செய்திருந்தது நாட்டின் இருபாரம்பரிய பெருமைபெற்ற மக்களை அவமதித்ததுக்கொப்பானது.

வடக்கிலோ, தெற்கிலோ பொதுமக்கள் நாட்டுக்கு உழைப்பவர்களின் அனுதாபத்தையும் நன்மதிப்பையும் பெற முயற்சிக்காதஅரசு நல்லரசென்று கொள்ள முடியாது.

உழைப்பில் வெறுப்புண்டு உல்லாசமாக அரசியலைத் தொழிலெனக்கொண்டுஅடிஅத்திபார அறிவின்றி கொக்கரிக்கும் அரசியல்வாதிகள் இன்று மலிந்திருப்பதால், அனுவசியமான அவசரகாலச் சட்டமும், அடக்குமுறைகளும் அதிகரித்திருக்கின்றன.

இந்தநிலை மாற அரசின் கொள்கையில் ந்யாயமான மாற்றம்வேண்டும் தமிழ் மக்களை இம்சிக்கும் ஆட்சி எதுவும் சட்ட ஆட்சியாகாது.

★ இன்று சுவாமி விவேகானந்தா ஜனன தினம்

# "துறவு வாழ்வின் உயர்வை உலகுக்கு உணர்த்தியவர்"

- சுவாமி சித்ருபானந்தா -

சுவாமி விவேகானந்தர் ஓர் மாபெரும் இந்துசமய துறவி. இன்றைய நவீன உலகில் வாழும் மக்கள் துறவின் தன்மையை மறந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிருர்கள். இந்நிலையில் இருக்கும் மக்களை தட்டி எழுப்பி, துறவியொருவரின் சுயநலம் அற்றவளுகை மக்களுக்கும் ஏன் உலகத்துக்கும் முன்மாதிரியாக வாழக்கூடியவன் என்பதை நம் சுவாமி விவேகானந்தர் தனது வாழ்வு மூலம் நமக்கு தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

வர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்குமுகமாக சுவாமி விவேகானந்தர் இவ்வாறு கூறினர். "கருமத்தினுலல்ல, புத்திரராலல்ல, செல்வத்தினுலல்ல, தியாகத்தினுல் மாத்திரமே, சிலர், சாகாவாழ்க்கையை அடைந்தார்கள்." இக்கூசயை முடிபாக உடையகருமங்கள் அனைத்தினையும் விட்டுவிடுவது சந்நியாசம்' எனக் கீதா சாஸ்திரம் கூறுகின்றது.

அநேகர் இல்லற வாழ்வை முடித்து சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்ளலாம் என்று கருதுகிருர்கள். ஒரு

இவ்ஆச்சிரமத்தை பாராட்டாமல் இகழ்ந்தபொழுது சுவாமிஜி "உண்மைச் சந்நியாசிகள் உலகத்துக்கு நன்மை செய்வதற்காகத் தங்களுடைய சொந்த ஈடேற்றத்தையும் இழந்துவிட தயாராயிருக்கின்



ருர்கள். அப்படியிருக்கையில் நீ நன்றி பாராட்டாதிருந்தால் உனது நிலை மிக இழிந்ததாகும்." என்ருர்.

"அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லந் துறந்தான் அவனிற் சத கோடி உள்ளத் துறவுடையோன்" என்ருர் பட்டனத்தார். "பாரனைத்தும் பொய்யெனவே பட்டணத்துப்பிள்ளையைப்போல், ஆரும் துறத்தல் அரிது அரிது" என்று தாயுமான சுவாமிகளால் இயம்பப்பட்ட கூற்று ஆகும். சுவாமி விவேகானந்தர் துறவு வாழ்க்கை மிகவும் பாராட்டிப் பேசியுள்ளார். ஒருநாள் ஒரு அன்பர்

நாடு முன்னேற சந்நியாசிகளுடைய திருக்கூட்டம் பெருக வேண்டும், சுவாமி விவேகானந்தர் இப்படிப்பட்ட திருக்கூட்டம் இந்தியாவில் பெருகி இருப்பதன்காரணமாக மகான்கள் அடிக்கடி தோன்றுகிருர். எத்தனையோ தவறு இருந்தாலும் இந்த மேன்மை பொருந்திய சந்நியாசி ஆச்சிரமம் மற்ற ஆச்சிரமங்களிலும் பார்க்க சிறப்புடையது என்பது சுவாமிஜியின் ஆழ்ந்த கருத்தாகும். ஒரு

வேதகாலத்தில் சந்நியாசிகள் தக்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டார்கள். பின்பு காலப்போக்கில் கானகம் சென்று தங்களுடைய மோட்சத்தை நாடினர். சுவாமி விவேகானந்தர்தான் இச் சந்நியாசிகளை "மக்களுடைய சேமத்தில் அக்கறை கொள்ளுங்கள், ஏழைகளிடத்தில் கடவுளைக் காணுங்கள், உலகில் அல்லற்படும் மக்களுக்கு சந்நியாசி நன்மை புரியும் காலத்தே அச்சந்நியாசியுடைய மோட்சமும் அளிக்கட்படுகின்றது" என்ருர். புத்தருக்கு பின்பு சந்நியாசி ஆச்சிரமத்துக்கு புத்துயிர் அளித்து இந்து சமயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் நம் சுவாமிஜி அல்லவா! இவருடைய திருவடிகளில் இப்புனித நாளில் வணங்கி வாழுவோமாக.

மக்கள் சேவையை மறந்து

## காலத்தை வீணுக்கும் சமூகத்தலைவர்கள்

"நன் யாழ்ப்பாண நகரின் முதல்வராக இருந்தால்" என்ற கட்டுரையை பார்த்த பொழுது அக் கட்டுரை இன்று நமக்கு வேண்டிய பல நடைமுறைகளை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது என்பதை உணர முடிந்தது, பல உதாரணங்கள் திரு. கு. நேசையா அவர்களால் கூறப்பட்டுள்ளன, 'ஒருவன் தன் நகரத்தின் மீது முதலில் மோகம் கொண்டு அதனை உயர்வாகக் கருத வேண்டும்" இதனை எப்படி உண்டாக்க வேண்டும் என்பது கேள்விக் குறிதான்.

பொதுவாக பதவிகளை வகித்து வகித்து பழகிப்போன பிரமுகர்களிடம் திருப்பங்களையும் மாற்றங்களையும் எதிர்பார்ப்பது மிகவும் கஷ்டமாயிருந்த போதிலும் வாக்காளர்கள் இடைவிடாது தங்கள் ஈடுபாட்டின் மூலம் வேண்டியதை செய்விக்க வேண்டும். மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய ஸ்தாபனங்கள் மக்கள் முன்னேற்றத்தை விடுத்து தங்கள் பணியாளர்கள் பிரச்னை போன்ற நிர்வாகப் பிரச்னைகளை நிரல்படுத்தி காலத்தையும் நேரத்தையும் வீணுக்குகின்றனர். அத்துடன் சமூக சேவை ஸ்தாபனங்களுக்கு தலைமை வகிப்பவர்களுக்கு சாட்சி சொல்வது போல சில அரசு உத்தியோகத்தர்கள் வந்து சேர்ந்துவிடுவார்கள். அவர்கள் எப்பொழுதும் எக்காலத்தும் ஏன் முக்காலத்தையும் உணர்ந்து நிலைமைக்கு ஏற்ருல்போல் தாளம்பேசடக் கூடியவர்கள். இவர்கள் முதலில் களம் கண்டு பிடிக்கப்பட்டு அப்புறப்படுத்தினல் தான் ஒரு பொது ஸ்தாபனம் தலைதூக்க முடியும். அல்லாவிட்டால் எதற்கும் சிவப்பு நாடா முறையையும் செய்ய

முடியாதென்ற நிலைமையையும் தான் ஏற்படுத்துவார்கள். இவர்களால் நமக்கும் நாட்டிற்கும் என்ன பயன்? எங்கள் பணத்தில் தான் தங்கள் வேதனத்தை பெறுகிருர்கள் என்று நினைப்பதில்லை. குடிமக்கள் தன்னைப்பற்றி தனது ஆட்சியைப்பற்றிஎன்ன நினைக்கிருர்கள். அவர்களுக்கு ஏற்ற குறை நிறை என்ன? என்பதை அறிந்துகொள்வதில் அக்கால மன்னர்கள் அதிக அக்கறை காட்டினர். மன்னன் இரவில அல்லது பகலில் சென்று குடிமக்களை நேரில் கண்டு அவர்களது குறைகளைக் கேட்டறிவார் இதற்கு 'குடிநலம் உசாவல்' என்று கூறுவதுண்டு.

— எஸ். கே. ரி. —

குடி மக்கள் தன்னை மன்னன் என்று அடையாளம் காணுதவாறு இரவில் மாறுவேடம் பூண்டு அவர்கள்அறியாதவாறு குடி மக்களின் குறை நிறைகளை தெரிந்து கொள்வான். 'இதற்கு நகர் சோதனை' என்று பெயர். இந்த நாட்களிலும் இதனை செய்யலாம். யார் செய்யப் போகிறுர்கள்? கூட்டத்தில தீர்மானம் இயற்றிவிட்டால் எல்லாம் நடந்துவிடும் என்ற நினைப்பில தான் நாங்கள் வாழ்க்து கொண்டிருக்கிருேம். இதனை நெறிப்படுத்துவதற்கு அக் கட்டுரையில் கூறிய ஆலோசனை வரவேற்கத்தக்கது. அதாவது 'நகர விவகாரங்கள் தொடர்பான விஷயங்களைக் கவனிப்பதற்கு சபை உறுப்பினர்களையும் திறமையுள்ள பிரஜைகளையும் கொண்ட நிலை இயற்குழுக்களை உருவாக்குவதாகும்.' [illegible]

களின் சிரேஷ்ட அதிகாரிகள் நேரடியாக வேலைகளைக் கண்காணிக்கவேண்டும். அத்துடன் அவர்கள் தினமும் குறிப்புகள் மூலம் அறிக்கைகள் சமர்ப்பித்தல்வேண்டும். தற்பொழுதும் இம்முறை சில இடங்களில் நடைமுறையில் இருக்கலாம். ஆனல் இவ்வறிக்கைகள் சமர்ப்பிக்கும் வழிமுறைத் தொடர்புசளால் அங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள் காலங்கடந்ததாகிவிடலாம். ஆகையால் சரியானதை செய்யவும் உடன் செய்யவும் தேவையற்ற தடைகள் என்ற போர்வையில் இருக்கும் கண்மூடித்தனமான நிதிப் பிரமாணங்களும் நடைமுறைகளும் வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. இதற்கு வேண்டியனவற்றை செய்யவேண்டிய பொறுப்பு பொது ஸ்தாபனங்களின் பொறுப்பை ஏற்கும் தலைவர்களின் தலையாய கடமையாகும்,

சுருங்கக் கூறின் தனிநோக்கங்களுக்காக பொது நோக்கங் கொண்டவர்கள் சிலர் தமது காலத்தையும் நேரத்தையும் விரயம் செய்வதால் —ஒருவர் பொதுத் தேவைளில் நாட்டம் கொள்வதற்கு சிந்தனை குறைகின்றது. இதனை நாம் நோக்கவேண்டும், பொது நோக்குடையோர் சிலர் தாமாகவும், ஒருசிலர் வற்புறுத்தலின் பேரிலும் இன்னும் சிலர் கட்சிப்பற்றிலும் ஒரு சிலர் அறிந்தும் அறியாதது போல் செய்கடமைகளை புரிந்து வாழ்கின்றனர்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன்அள் பவர்க்கு" இக்குறளின் கருத்துக்கமைய வாக்காளர் தொண்டர்களை தெரிவு செய்தல் நலம்.

# பிரி. பிரதமர் மகனை காணவில்லை!

## சகாரா பாலைவனத்தில் தேடுதல் வேட்டை!

லண்டன், ஜன. 16

பாரிஸிலிருந்து செனகல்நாடு வரையிலான 10,000 மைல்கள் காரோட்டப்பந்தயத்தில்பங் கு கொண்ட தனது மகன் மார்க் காணுமற் போய்விட்டதால் மிகவும்கவலையுடன்அதேவேளை யில் மகனைப்பற்றிய செய்தி களை அறிவதில் மிக ஆவலுட னும் பிரிட்டிஷ் பிரதமர் திரு மதி மாகிரட்தட்சர் இருந்து வருகிறார் என அவரது வாசஸ் தல உதவியாளர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமரின் மக னை கரோட்டவீரர் மார்க் புதுவருட தினத்தன்று பாரிஸி லிருந்து செனகல் நாடுவரையி லான பெரும் காரோட்டப்பந் தயமொன்றில் பங்குபற்றி னார். இப்பந்தயம் இம்மாதம் 20ந் திகதியே செனகல் நாட் டில் முடிவடையுமென பந்தய ஏற்பட்டாளர்கள் தெரிவித் திருந்தனர்.

பிரிட்டிஷ் பிரதமரின் மகன் 'பேஜோ' ரகக் காரொன்றி லேயே பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தனது உதவிச் சாரதி, ஒருதிருத்துனர்-சகிதம் போட் டியில் கலந்துகொண்டரென வும், அவர்களும்கூடவே காணு மல்போயிருப்பதாகவும் அறி விக்கப்பட்டுள்ளது.

சகாராப் பாலைவனப் பகுதி யிலேயே மேற்படி நபர்களைக் காணவில்லையென அறிவிக்கப் பட்டிருக்கின்றது. பிரெஞ்சு ஜனாதிபதிதனது ஆகாயப்படை விமானங்களைத் தேடுதலுக் காக அனுப்பி வைத்துள்ளார் அல்ஜீரிய நாட்டுத் தரை, விமானப்படைகளும் தீவிர தேடுதல்களில் இறங்கியிருக் கின்றன,

பிரதமர் தட்சரின் கணவர் திரு தட்சர் தேடுதல் நடவடிக் கைகளை நேரில் கவனிப்பதற் கென அல்ஜீரியா நாட்டிற்கு வந்துள்ளார். (கி)

---

## பிரிட்டிஷ் அமைச்சர்

# இலங்கை விஜயம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிவிவகார, பொதுநலவாய அலுவலக ராஜாங்க அமைச்சரான திரு. டக்ளஸ் ஹேர்ட் எம். பி. உத்தியோகபூர்வமாக இலங் கைக்கு விஜயம் செய்கிறார்!

இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் அவர் ஜனாதிபதி யைச் சென்று சந்திப்பார். அத்துடன் பிரிட்டன் இலங்கை பற்றிய விஷயங்கள் தொடர் பாகவும் சர்வதேச விஷயங் கள் தொடர்பாகவும் பல அமைச்சர்களுடன் பேச்சு நடத்துவார.

ஜனவரி 19ல் திரு. ஹேர்ட் ஹெலிக்கொப்டர் மூலம் விக் டோரியா அணைக்குச் செல் வார். கொழும்பு திரும்புமுன் பேராதனைப் பூங்காவுக்கும் செல்வார்.

இந்தியாவில் விஜயம்ஒன்றை முடித்துக்கொணடு இங்குவரும திரு. ஹேர்ட் மாலைதீவுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார். செவ்வாயன்று மாலை அவர் பிரிட்டன் திரும்புகிறார்.

---

## வீமன்காமம் கொலை வழக்கு:

# "தாக்குதல் காயங்களே மரணத்திற்கு காரணம்"

(மாவிட்டபுரம்)

வீமன்காமம் கொலைவழக்கு விசாரணையின்போது சாட்சிய மளித்த யாழ். சட்டவைத்திய அதிகாரி, தாக்குதல் காயங் களே மரணத்திற்குக் காரணம் என்று தெரிவித்தார்.

வீமன்காமத்தைச் சேர்ந்த நல்லான் அல்லிக்குட்டி என்ப வர் இரும்புச் சிலாகையினல் தாக்கப்பட்டு கொலையுண்டி ருந்தது தொடர்பாக அதே யடத்தைச் சேர்ந்த கந்தையா சின்னராஜா என்பவர் மீது குற் றஞ்சாட்டி இவ்வழக்குதொட ரப்பட்டிருந்தது.

மல்லாகம நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ் வரன்முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக் கப்பட்ட போது, யாழ. சட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். சரவண பவானந்தன் சாட்சியமளித் தார்.

விசாரணை பெப்ரவரி 24ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட் டது. எதிரி சார்பில் சட்டத் தரணி ஆர். ஜே. செல்வரத்தி னம் ஆஜரானார். (க)

---

## அமெரிக்க— மேற்குலக உறவில் விரிசல்

### —டைம்ஸ் ஒஃப் இந்தியா

புதுடில்லி, ஜன. 15

அமெரிக்காவுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும இடையி லான உறவுகளில் விரிசல் ஏற் பட்டுவருவதாக "டைம்ஸ் ஒஃப் இநதியா"வின் லண்டன் நிருபர் எழுதுகிறார்.

அதே பத்திரிகையில் திரு. இந்தர்மல் ஹோத்ரா என்ற பிரபல விமர்சகர் எழுதியுள்ள கட்டுரையில்; நேட்டோ கூட்டணிக்குள் பிளவு ஏற்பட் டுள்ளதாகவும் பல நெருக்கடி கள் தொடர்பாக நேட்டோ நாடுகள் பின்பற்றும் பல்வேறு பட்ட அணுகு முறைகளினல் மேற்கு நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள் மேன் மேலும் தெளிவாகத தெரிகின்றன என் றும குறிப்பிட்டுள்ளார்.

---

## புருஸல்ஸ் அறிக்கையுடன் எமக்கு சம்பந்தம் இல்லை

### கிரேக்க அரசு அறிவிப்பு

எதன்ஸ், ஜன. 15

புருஸல்ஸில் ஐரோப்பிய பொருளாதார சமாஜ நாடு களின் வெளிவிவகார அமைச் சர்கள் கைச்சாத்திட்ட அறிக் கைக்குத் தான் உடன்பாடி ல்லை என்று கிரேக்க அரசாங் கம் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையிலுள்ள சில விதிகள் குறித்து அதிருப்தி கொண்டுள் ளது என்றும் துணைப் பிரதமர் திமித்ரிஸ் மரூடே தெரிவித் தார்.

கிரேக்க அரசாங்கத்தின் கட்டளைகளை மீறி இந்த அறிக் கையில் கைச்சாத்திட்ட கிரே க்க உதவி வெளிவிவகார அமைச்சர் அஸிமகிஸ்ஃபோடி லால் பதவி நீக்கம் செய்யப் பட்டார் என்றும் அவர் கூறி ஞர்.

போலந்து விவகாரம் தொடர்பாக சோஷலிஸ நாடு களுடனன உறவுகளைத் துண் டிக்கும் எச்சரிக்கைகளைக் கொண்ட விதிகள் இந்த அறிக் கையிலிருப்பதை கிரேக்க அர சாங்கம் விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

---


# மொறஸ்டான்

கிருமிநாசினியும், பங்கசு கொல்லியும்.



மிளகாய், திராட்சை, புகையிலை, கெக்கரி, தேயிலை மற்றும் பயிர்களைத் தாக்கும் சிற்றுண்ணி, செஞ்சிலந்தி, ஊதாப் பூச்சிகளையும் பயிர் பங்கசு உட்பட படர் பூஞ்சனத்தையும் கட்டுப்படுத்தும். தண்ணீரில் கரையும் தூள்.

BAYER

ஒரு "பாயர்" உற்பத்தி

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட், கொழும்பு 10.

Mel Ads


---

# "மாநகரசபைஉறுப்பினர்க்கு அதிகாரம் அளிக்கப்படும்"

## டாக்டர் ஏபிரகாம் குற்றச்சாட்டுக்கு யாழ். மேயர் பதில்

(யாழ்ப்பாணம்)

"சட்டவிரோதமான முறை களில் நூற்றுக்கணக்கான வீடுகளில் மின்சாரம் பாவிக் கப்படுகிறது. இதற்கு மாநகர சபை உறுப்பினர்கள் உடந் தையாக இருப்பதாக மக்கள் கூறுகிறார்கள்" என்று திரு. தம்புகந்தையா யாழ் மாநக ராட்சிமன்றப் பொதுக்கூட்டத் தில் குற்றம்சுமத்தினார்.

மேயர் திரு. இராஜா விசுவ நாதன் தலைமையில் இக்கூட் டம் நடைபெற்றது.

திரு. தம்பு கந்தையா தொடர்ந்து பேசுகையில், சட்டவிரோதமாக நடை பெறும் செயற்பாடுகளுக்கு முதல்வர் உடந்தையாயிருப்ப தென்றசொல்லுக்கு இடமளிக் கக்கூடாதென்று குறிப்பிட்ட தோடு, மணிக்கூட்டுக் கோபுரப் பிரச்னையைத் தீர்க்கப் பிர தமரை எதிர்பார்த்துக்கொண் டிருக்கக்கூடாது என்றும், பல ரும் மாநகரசபை நடவடிக்கை கள் குறித்துக் கதைப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாதென் றும் ஆலோசனைதெரிவித்தார்.

### உறுப்பினர்களுக்கு அதிகாரமில்லை

எதிர்க்கட்சி முதல்வர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் பேசுகையில், யாழ்ப்பாணத் தைப் பரிபாலிக்கும்படிதான் மக்கள் எங்களை இங்குஅனுப்பி வைத்தார்கள். ஆனல் இது வரை என்னசெய்தோம்?" என்று கேட்டார்.

அங்கத்தவர்களுக்கு எதுவித அதிகாரமும் இல்லையென்று குறிப்பிட்ட டாக்டர் ஏபிர காம், ஊழியர்கள் கடமையில் அங்கத்தவர்கள் தலையிட உரிமையில்லாதநிலையில் இருக் கிறார்கள் என்றும் இதற்குச் சட்டஆலோசனை பெறவேண் டும் என்றும் சொன்னார்.

"ஒரு தெருவில் 10 பேர் சட்டவிரோதராக மின்சாரம் பாவித்தால், அத்தெருவில் உள்ள அத்தனை வீடுகளிலும் மின்சாரம் துண்டிக்கப்படு கிறது! இதுபற்றி மின்சார ஊழியர்களிடம் கேட்டால் ஏதோவெல்லாம் சொல்கிறார் கள். இதற்கு மாநகரசபை உடந்தையா" என்று கேட் டார் டாக்டர்.

### மேயர் பதில்

#### யாழ் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவி பெறவேண்டும்

திரு. என். ரி. செல்லத் துரை பேசுகையில் கூறிய தாவது:

"யாழ் மாநகரம் இருந்த மாதிரியே இருக்கிறது. அபி விருத்திசெய்யப் பணவருவாய் காணுது. அரசாங்கத்திடமிருந் தும் பணஉதவி பெறமுடியா திருக்கிறது. கொழும்பில் அபி விருத்திவேலைகள் நடைபெறு கின்றன. யாழ்ப்பாணத்தை அழகான நகரமாக்கமுடியாம லிருக்கிறது.

"கொழும்பு நகரம் வெளி நாடுகளின் உதவியுடன் அபி விருத்திசெய்யப்படுகின்றது. யாழ் மாநகர முதல்வரும் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு இந்நகரையும அபி விருத்திசெயதல்வேண்டும்" என்றார்.

#### முதல்வர் பதில்

முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பதிலளித்துப் பேசுகையில்தெரிவித்ததாவது:

"மணிக்கூட்டுக்கோபுர வேலைகள் நடைபெறுகின்றன.

"வாடி வீட்டு விஷயம் [illegible] களைக் கேட்காமல்தான் செய் யப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## [..] நகர

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''சட்டவிரோதமாக மின்சாரம் பாவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

''உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். இதற்கான அறிக்கை ஒன்று அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

(மா-அ)

## ஹெல்மட் இல்லை: ரூ. 100 அபராதம்

(புலோலி)

ஹெல்மட் இல்லாமல் மோட்டார் சைக்கிளோடிய இளைஞரொருவருக்கு 100ரூபா அபராதம் அல்லது ஒரு மாதச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

எஸ். ஸ்ரீதரன் என்பவர் ஹெல்மட் இல்லாமல் மோட்டார் சைக்கிள் ஓடினாரென்ற குற்றச்சாட்டின்பேரில் பருத்தித்துறைப் பொலிசார் சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதவான் எதிரிக்கு 100 ரூபா அபராதம் அல்லது ஒருமாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.


வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
எங்க பாட்டன் சொத்து

6 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

றீகல்
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் + லதா
நடித்த
மீனவ நண்பன்
(கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி லட்சுமி
தங்கைக்காக

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:00, 4:30,
யாழ். நகர் 7:00, 9:30
B rry Newman, Shelly Winson
CITY ON FIRE
(More suitable fcr Adults)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்


சாந்தி (யாழ். நகர்) தினசரி 10—30, 2—30,
தொலைபேசி;7642 6—15, 9—45
இன்று 120-வது தினம்
கமல்—ஸ்ரீதேவி—முத்துராமன்
மேஜர்— நடித்த
குரு
(கலர்) (கடைசி வாரம்)

ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

WINDSOR JAFFNA From 16th to 17th
Daily:— 10.30, 2.00, 4.?0, 7.00, 9.30
Steve M Queen in
THE GETAWAY
Actio Packed Car Chases (Color Scope)
18th to 19th
The Gumball Rally
Comedy = [..]re chase



CENTRIC
சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் றொபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26358/9


## இன்றைய பலன்

தை மாதம் 3ம் திகதி
சனிக்கிழமை
(16—1—82)

மேடம்: நம்பிக்கை மோசடி நடக்கும், வியாபாரத் துறையில் நஸ்டம் ஏற்படலாம்; அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். சிலருக்கு வாதரோகம் தென்படும். உணவு விடயத்தில் அதிக கவனம் வேண்டும்.

இடபம்: எண்ணிய கருத்தில் இன்று வெற்றியுண்டு. புண்ணிய வழிகளில் பொருள் செலவு ஏற்படும். கண்ணியமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படலாம். வரவேற்கத்தக்க தினம்.

மிதுனம்: அன்புக் கரங்கள் அணைக்கும். அதிஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

கடகம்: மெத்தவும்பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தனை வாழ்வு உண்டு. பொருள் வருவாயில் புதிய திருப்பம் தென்படும். பொன்னான தினம்

சிங்கம்: எதிலும் தடுமாற்ற நிலை தென்படும். குசுகுசுப் பேச்சுக்களின் மூலம் அவதூறுகள் வரப்படலாம். வியாபாரத் துறையில் மந்தநிலைதென் படுகின்றது. உடல் நலத்தை பேணிக்கொள்ளவும்.

கன்னி: மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் மாற்றம் விளையும்! இன்ப சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம். அபாயகரமான காரியங்களை தவிர்த்துக் கொள்ளவும்.

துலாம்: மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு இன்று நல்ல நாள். இனசனங்கள் மத்தியில் செல்வாக்கு குடும்பத்திலும் இன்பமான சூள்நிலை தென்படும்.

விருச்சிகம்: பிரிவின்தாக்குதல் வேதனையைத் தரும். தொழில் துறையிலும் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப் பெயருக்கும் இடமுண்டு. மனத்திடம் விரும்பத் தக்கது.

தனு: கொள்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. கல்வித்துறை முன்னேற்றமுண்டு. அறிஞர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

மகரம்: பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களுடைய நட்பைப் பெறுவீர்கள். வீட்டில் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு.

கும்பம்: ஆயுத பயத்துக்கும் அரச கவலைக்கும் இடமுண்டு. கைகலப்புக்களை தவிர்த்துக் கொள்ளவும். எதிரிகள் விடயத்தில் அதிக விழிப்புடன் இருக்கவும். தெய்வநம்பிக்கை சிறந்த பயன்தரும்.

மீனம்: பொய்க்கோபம் காட்டிய ஒருவர் இன்று உங்களுடன் இணைந்து வருவதற்கு முற்படுவார். காதல் ஜோடிகளுக்குப் புதிய ஆதரவு கிடைக்கலாம். வாழ்க்கையில் சந்தம் நிலவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மா. அ. ச. தலைவர்களுக்கும் மோட்டார் கார்கள்

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர்களுக்கும் மோட்டார் கார்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உத்தியோகபூர்வ பாவனைக்காக இவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் மோட்டார் கார்களை, இன்னும் மூன்று மாத காலத்தில் வழங்குவதாக உள்நாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

(கி)

## இலங்கை - ஜேர்மன் ஜ குடியரசு நட்புறவுச் சங்க யாழ். கிளைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை - ஜேர்மன் ஜனநாயக்க குடியரசு நட்புறவுச் சங்க யாழ். கிளை வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

வட்டுக்கோட்டை எம். பி. யும் கிளைத்தலைவருமான திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் ஸ்தானிகரின் யாழ் விஜயம் பற்றிய நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்படும்.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசிற்கு கடந்த வருடம் விருந்தினராக வட்டுக்கோட்டை எம். பி. சென்றிருந்தார். அந் நாட்டைப்பற்றிய தனது அனுபவங்கள் பற்றியும்கூட்டத்தில் உரையாற்றுவார்.

## விவேகானந்தர் ஜயந்திவிழா

(பருத்தித்துறை)

இன்றும், நாளையும் சுவாமி விவேகானந்தரின் ஜயந்திவிழா பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் கொண்டாடப்படவிருக்கின்றது.

இன்றைய விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா செவாச்சிரமத்துக்கான பிரார்த்தனை மண்டப கட்டிட வேலைகளை ஆரம்பித்துவைப்பார். மாலை 'சுவாமி விவேகானந்தரின் வாழ்வு' என்ற தலைப்பில் செல்வி சந்திர கௌரி குமாரவேலு சிறப்புரை நிகழ்த்துவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு விசேட பொதுக்கூட்டம் நடைபெறும். இதில் சிறுவர்களது நிகழ்ச்சிகளும் திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணனின் விசேட விரிவுரையும் இடம்பெறும்.

(கி)

## கிறிஸ்தவ கட்டுரைப் போட்டி

(அரியாலை)

இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி ஸ்தாபனம் அகில இலங்கை ரீதியில் கிறிஸ்தவ சம்பவங்களை அடிப்படையாக வைத்து கட்டுரைப் போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

'கிறிஸ்துவின் சிலுவை மரணம் எனக்கு ஆதாயம்' என்ற தலைப்பில் முதலாவது கட்டுரைப் போட்டி நடைபெறும்.

போட்டியில் வெற்றிபெறுவோருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

## பின்னுறுதிக்கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மல்லாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை அமிர்தலிங்கம் பெண் கமலாதேவி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்.

— மரணமெய்தியவர்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல.ரி. 124

சண்முகம்பிள்ளை அமிர்தலிங்கம், 'தைரியவில்லா.' மல்லாகம்.

—மனுதார்

எதிராக

1. அமிர்தலிங்கம் மகள் கலாநிதி, மல்லாகம்.
2. சண்முகம்பிள்ளை யோகலிங்கம். பராயமற்ற 1ம் எதிர் மனுதாரின் பாதுகாவலராக மூளாய், சுழிபுரம்.

—எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு தை மாதம் 22ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதுமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
இ த விக்னராசா
மனுதாரின் சட்டத்தரணி.
1975

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வணபிதா சேவியர்ஸ் ரஙில்ஸ்லால் தனிநாயகம் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

1. வண. பிதா. யோசேப் பொன்னையா இமான்னுவல் செல்வராசாவும்
2. வண. பிதா. யோசேப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை இருவரும் மேற்றிராசனம், யாழ்ப்பாணம்.

மனுதார்கள்.

மரணசாதன )
நியாயாதிக்கம் )இல. த/3633

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தையும், கொடிசில் என்னும் உப மரணசாதனத்தையும் எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு தை மாதம் 22ம் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
தா. சூலஞானம்
பதிவாளர்

1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

தயாரித்தவர்:
அ. மரியாம்பிள்ளை,
(சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்)
25/, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
1971

## புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 3000 வெற்றுச் சாக்குகள்வரை கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்ய இருக்கிறது. விண்ணப்பப்பத்திரத்துக்கு ரூபா 5/ம் வைப்புப்பணமாக ரூபா 250/ம் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்று 23. 1. 82 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் ''பொது முகாமையாளர், புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு'' என விலாசமிட்டு அனுப்புதல்வேண்டும்.

என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
புங்குடுதீவு.
12. 1. 82. 1974

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு சுப்பிரமணியத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

க. சுப்பிரமணியம் கைம்பெண் இராசமணி
மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

மனுதார்

வழ. இல: ரி/118

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு மார்கழி மாதம் 4ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

வரைதல்
செ மகேச
மனுதாரின் சட்டத்தரணி.

காரணங் காட்டுந் திகதி 19—2—82க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி
சு வ கணேசன
பதிவாளர்
1965

## தேவை

அனுபவமுள்ள காவற்காரர் தேவை. 45 வயதுக்கு குறையாதவராக இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் யாவும் தை 31ந் திகதிக்கு முன்பாக அதிபர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அனுப்பி வைக்கவும்.
1980



## அமரர் யோகராசா

பரந்தன்இரசாயன தொழிற்சாலை போர்மன் கார்த்திகேசு யோகராசாவின் நினைவுதினம் இன்றாகும். கடந்த மாதம் 16—ம் திகதி பரந்தன் இரசாயன தொழிற்சாலை விடுதியில் காலமானார்.

கொடிகாமம் காலஞ்சென்ற வழக்கறிஞர் வி. எஸ்.கார்த்திகேசு தம்பதிகளின் 2வது மகனை இவர், யாழ். மத்திய கல்லூரியில் பயின்றபின் சென்னை ஒட்டோமோபைல் என்ஜினியரிங் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார்.

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் 1956ல் ஆண்டு போர்மனாக பதவிஏற்று 25 வருடகாலம் பணியாற்றினார். பரந்தன் இரசாயன தொழிற்சாலை பொழுதுபோக்கு கழகத் தலைவராக இருந்து, 'கிளப்' தினங்களை வெற்றிகரமாக நடத்தினார். தொழிற்சாலை ஊழியர் கலை, கலாச்சார மன்றத்தின் நாடகங்களிலும் நடித்துள்ளார். இவர் ஒரு மேடைப் பேச்சாளரும் எழுத்தாளருமாவர்.

1952ம் ஆண்டு கொடிகாமம் சனசமூக நிலையத்தின் செயற்குழு உறுப்பினராக பணியாற்றியுள்ளார். 1973—ல் தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழு உறுப்பினராகவும் கடமையாற்றினார். கொடிகாமம் பத்திரகாளி அம்மன் கோவில் பரிபாலகர்களில் ஒருவராகவும் பணியாற்றினார். பரந்தன்ரசாயன தொழிற்சாலை முன்னேற்றத்திற்காக இறுதிமூச்சுவரை உழைத்தார். அவர் ஆத்மா சாந்திபடைவதாக.

ஓர் அன்பர்

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 121, சென் பற்றிக்ஸ் வீதியில்உள்ள மாடி வீடும், ஒன்றேகால் பரப்பு ஆதனமும் சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்கு உண்டு. கா. சி. செ. முத்துக்குமாரு பிரசித்தநொத்தாரிஸ், 121, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7460. 1955

சாவகச்சேரி, கண்டி றோட்டில் சந்தையிலிருந்து 50 யார் தூரத்திற்குள் உள்ள இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: தேவபாலன், சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி. 1961

## வலி-கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தால் 10,000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப் பத்திரப மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. 1982—01—23ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 12—00 மணி வரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை 1982—01—21ம் திகதி வியாழக்கிழமை வரை சங்கத் தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரமொன்று ரூபா 1/ ம், வைப்புப் பணமாக ரூபா 250/ ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் மேற்படி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர், வலி-கிழக்கு [தென் பகுதி] ப.நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். இக்கேள்விப் பத்திரத்தினை சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு. விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்குகளுக்கான விண்ணப்பம்'' என எழுதப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
நீர்வேலி,
1982—01—13
வே/நா. 1987

## பதவி வெற்றிடம்

## நீர்வேலி காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கம்

சில்லறை விற்பனை நிலைய முகாமையாளர் (ஆண்)

1. தகமைகள்: க. பொ. த. (சாதா) பரீட்சையில் கணக்கியல்/எண்கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
2. கூட்டுறவு ஊழியர் (சாதா) தராதரப் பத்திரமும், இரும்பு வியாபாரத்தில் அனுபவமுமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. பிணை: ரொக்கம் 3000/-
   ஆதனம் 5000/-
4. சம்பளம்: கூ. வே. ஆணைக்குழுவின் நியமப்படி வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 25—01—82 க்கு முன்பதாக தலைவர், காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கம், நீர்வேலி. என்னும் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

(1982)

### விற்பனைக்கு

மானிப்பாய் சுகாதாரக் கந்தோருக்கு அண்மையில் பிரதான வீதியில் 4½ பரப்பு தென்னைகளுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: சிவபாக்கியம் ஆறுமுகம், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 1963

வளலாயில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. சின்னத்தம்பி, சாமிக்கலட்டி, இடைக்காடு, அச்சுவேலி. 1966

### தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஆங்கிலம், கணிதத்தில் தேர்ச்சியும், ஆங்கில தட்டெழுத்தில் நல்ல பயிற்சியும், அனுவமுமுள்ள பெண் தட்டெழுத்தாளர்/லிகிதர் தேவை. தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன்20—01—82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1969, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1969

முகாமையாளர், உதவி முகாமையாளர், காசாளர் பதவிகளுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 17-1 82 காலை 10 மணிக்கும் 3 மணிக்கு இடையில் நேரில் வரவும். வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம், பிறேமா றேட்ஸ் மேல்மாடி, கொடிகாமம் வீதி, நெல்லியடி. (நெல்லியடிச் சந்தியிலிருந்து 100 யார்) 1988

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 5000ற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப்பணமாகச் சங்கத்தில் ரூபா 250/- செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 22—1—82 வெள்ளிக்கிழமை நண்பகல் 12—00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.
சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்.
12—1—1982. 1986

## வெள்ளிவிழா வைபவம்

(அரியாலை)

காரைநகர் கசூறினா கடற்கரையில் அமைந்திருக்கும் மிஷன் இல்லத்தின் வெள்ளிவிழா வைபவத்தை ஜனவரி 30ம் திகதி கொண்டாட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

## சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்

(அரியாலை)

அரசாங்க நில அளவையாளராக 21 ஆண்டுகள் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றிய திரு. வேலுப்பிள்ளை ஞானரத்தினம் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

(க)

## ஹோம் பிரின்ஸ் லிமிட்டெட்
## உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன் ஞாயிறு**

**கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.**

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்**

**[1] ஹோம் பிறின்ஸ் லிமிட்.**
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

**[2] யாழ் மெட்டல் சேல்ஸ் சென்ரர்**
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

**[3] குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்**

**ஹோம் பிறின்ஸ் லிமிட்டெட்**
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

**ரவிந்திரா ஸ்டோர்ஸ்**
285, காலி வீதி, வெள்ளவத்தை.

**லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்**
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

**ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்**
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

**நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்**
127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

**கட்டணம் ரூபா 65-00**


கிரிக்கட் டெஸ்ட்

## இந்: 4-481
## இங்: 0-144

(சென்னை)

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே சென்னையில் நடைபெற்றுவரும் 5வது கிரிக்கட் டெஸ்ட்டில் மூன்றாவது நாளான நேற்று ஆட்டநேர முடிவில் இந்தியா 481 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளை இழந்த நிலையில் தனது முதலாவது இன்னிங்ஸை நிறுத்திக்கொண்டது.

இங்கிலாந்து கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் விக்கட் இழப்பு எதுவுமின்றி 144 ஓட்டங்களை எடுத்தது. சனிக்கிழமை ஓய்வுநாள். (வெ)

### வெங்கட்ராமன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறை அமைச்சர்களின் பொறுப்புக்களும் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

புதிய ஒருவரும் மத்திய, அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. ஜகந்நாத் என்பவரே புதிய சட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (வெ)

### 13 பொலிஸ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்தல மீஸிஸாமே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள்மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு பெப்ரவரி 9ல் மேல் விசாரணை செய்யப்படவிருக்கிறது. (மா)


### நன்றி நவிலல் - அந்தியேட்டி அழைப்பு
### திரு. கந்தையா செல்லையா
(இளைப்பாறிய ஆசிரியர்)



சுதுமலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா செல்லையா அவர்களின் 17-12-81ல் நடைபெற்ற ஈமக் கிரியைகளில் பங்குபற்றியவர்கட்கும், அனுதாபம் தெரிவித்தவர்கட்கும், உதவி, ஒத்தாசை நல்கியவர்கட்கும் எமது மனமுவந்த நன்றி. அன்னாரின் அந்தியேட்டி (இன்று) 16—1—82 சனிக்கிழமை காலை 7—00 மணியளவில்கீரிமலையிலும், வீட்டுக்கிருத்தியம்பகல்12மணியளவில்அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்

மனைவி. **திருமதி செல்லையா**
(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

சகோதரர்: **திரு. க. சிவஞானம்,**
**திருமதிகள் அ. ஆறுமுகம்,**
**ப. பரமானந்தம்,**
**செல்வி க. சரஸ்வதி**
**மைத்துனர் குடும்பம்**

''வசந்தம்'', உடுவில் கிழக்கு, சுன்னாகம் (1994)



### மரண அறிவித்தல்
### க. தம்பிப்பிள்ளை

சங்குவேலி தெற்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினம், இராசதுரை (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்). மகிழ்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம், நடராசா, தங்கேஸ்வரி ஆகியோரின் மாமனருமாவார். அன்னாரின் பூதவுடல் சங்குவேலி இல்லத்திலிருந்து இன்று (16—1—82) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 1993



### மரண அறிவித்தல்
### திருமதி மாகிரெட் நாகம்மா சினித்தம்பி

திருமதி மாகிரெட் நாகம்மா சீனித்தம்பி காலமானார். இவர், காலஞ்சென்ற திரு. சீனித்தம்பி (புகையிரத நிலைய அதிபர்) இன் அருமை மனைவியும், ஜெயமணி, நேசம், இரத்தினராசா (அமெரிக்கா), பி. சீனித்தம்பி (தபாலதிபர், மல்வானை), தங்கராசா (கல்வி அமைச்சு) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை, கனகரத்தினம் (பேர்ள் கொமேஷல் கொம்பனி), இராணி (அமெரிக்கா), மேரி, நீற்று (பிரான்பற்று அரசினர் பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் ஆவார். நல்லடக்கம் இன்று (16—01—82) பண்டத்தரிப்பில் பி. ப. 4—30 மணிக்கு நடைபெறும். (1996)


# கொள்ளைச்சம்பவத்தை நான் காணவில்லை என்பதை மறுக்கிறேன்''
## கம்பர்மலை அறுவர் கொலைவழக்கு
## குறுக்கு விசாரணையில் நாராயணசாமி

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

''சம்பவதினமிரவு எதிரிகள் எனது வீட்டிற்குள் வந்து துப்பாக்கியால் சுட்டபோது நான் தட்டியைக்கிளப்பிக் கொண்டு பல வேலிகளைக் கடந்து பொலிஸ் நிலையம் நோக்கி ஓடினேன்.

இவ்வாறு கம்பர்மலை அறுவர் பயங்கரக் கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்ட குடும்பத்தலைவரான கந்தையா நாராயணசாமி (வயது 61) 2ம், 3ம், 7ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஸி.மோதிலால் நேருவினால்தொடர்ந்துகுறுக்கு விசாரணைசெய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இக்கொலைவழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. சட்டத்தரணி மோதிலால் நேருவினால் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சாட்சி குறிப்பிட்டதாவது:

சட்: நீர் சம்பவநேரம்தெற்குப் பக்கத்து தட்டியைக் கிளப்பி வெளியே சென்று பொலிசிற்குச் சென்றீர்?-ஆம். பல வேலிகளைக் கடந்து பொலிஸ் நிலையம் நோக்கி ஓடினேன்.

சட்: அப்படி நீர் சென்றபோது இனத்தவர்கள் சிலர் பொலிஸ் ஜீப் சம்பவஇடத்திற்குச் சென்றதாகச் சொன்னார்கள்? ஆம்.

சட்: அவர்கள் எந்த இடத்தில் வைத்துச் சொன்னார்கள்? தெருக்கிணற்றடியில் வைத்து.

சட்: நீர் போன பாதையால் போனால் வல்வெட்டித்துறை உடுப்பிட்டி பிரதான வீதியில் வல்வெட்டிக்குச் செல்லலாம்? ஆம்.

சட்: உமது வீட்டிலிருந்து பொலிஸ் நிலையம் எவ்வளவு தூரத்திலுள்ளது?— சுமார் அரைமைல் தூரத்திலுள்ளது.

சட்: சம்பவதினமிரவு உமது கொட்டிலில் இரண்டு லாம்புகள் எரிந்துகொண்டிருந்தன?- நான் இவ்வழக்கில் முன்பு சாட்சியமளிக்கும்போது ஒரு லாம்பு உள் அறையிலும், மற்ற லாம்ப வெளிக்கொட்டிலிலும் எரிந்துகொண்டிருந்ததாகக்கூறினேன். நான்வெளிக் கொட்டில் என்றுகூறியதுபுறம்பான கொட்டிலை அல்ல. ஒரே கொட்டிலையே. அறைதவிர்ந்த ஏனைய பகுதியையும் சேர்த்துச் சொன்னேன்.

சட்: முன்பு நீர் இரண்டு அறை என்று சொல்லியிருந்தால் அது பிழை?—உள் அறையையும் கொட்டிலின் முன்புறத்தையும் சேர்த்துத்தான் சொன்னேன்.

சட்; உமது வளவுக்குக்கிழக்குப் பக்கவாசல்?—ஆம். அதில் தகரப்படலை போடப்பட்டுள்ளது. ஒருவர் எனது வீட்டிற்குப் படலையால்வந்தால் இடப் பக்கத்திற்குத் திரும்பவேண்டும்.

சட்: படலையிலிருந்துகொட்டிலுக்குப் போவதற்குகுனிந்து தான் போகவேண்டும்?—ஆம்.

சட்: வளவுக்குள் தகரப் படலையால் வந்தால் கொட்டிலுக்குள் நின்று பார்த்தால் தெரியாது?—ஆம். குனிந்து பார்த்தால்தான் தெரியும்.

சட்; உமது வீடு இருக்கும் காணி உமக்குச் சொந்தமானதா?— ஆம், சுமார் 35 வருடங்களாகச் சொந்தம்.

சட்: 35 வருடங்களாக அக்காணிக்குள் இருக்கும் வீடு கொட்டிலாகவே உள்ளது?— ஆம்.

சட்: கல்வீடுகட்டவில்லை?— வசதி இல்லாதபடியால் கல் வீடு கட்டவில்லை.

சட்: ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 4 ரூபாவாக விற்கையில் இரவுஇரவாக இரண்டு இலாம்புகளையும எரியவிட்டிருந்தீர்?— விலை கூடினாலும் நாங்கள் இரண்டு இலாம்பும் எரிப்பது வழக்கம்.

சட்: நீர் இந்தக் கொலைச் சம்பவத்தைக்காணவில்லை என நான் கூறுகிறேன்?— அதை நான் மறுக்கிறேன்.

சட்: 4—1—82ல் நீர் சாட்சியமளிக்கையில் உமது வீட்டுப் படலையில் கேட்ட வெடிச்சத்தத்தில்தான் நீர் நித்திரைவிட்டெழுந்ததாகக்கூறியுள்ளீர்?— அப்படிக் கூறியிருந்தால அது தவறு.

சட்: முதல் வெடிச்சத்தம் கேட்ட ஒரு சில விநாடிகளில் மற்ற வெடிச்சத்தங்களும் கேட்டன?— இல்லை 2, 3 நிமிடங்களின் பின்.

சட்: முதல் வெடிச்சத்தம் கேட்டதும் நீங்கள் நித்திரையால் எழும்பிவிட்டீர்கள்?— ஆம், நானும் மகள் காஞ்சனவதியும்எழுப்பி கேட்ட வெடிச்சத்தம் பற்றிக் கதைத்தோம். அந்த வெடிச்சத்தம் ரோகினி அம்மாவீட்டுப்பக்கத்திலிருந்து வந்தது.

சட்: பின்பு?— அதற்குப் பின் வெடிச்சத்தம் கேட்டதும் வந்துகுனிந்துபார்த்து யாரடா என்று கேட்டேன்.

சட்: அன்று பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி திரு. திருச்சிற்றம்பலத்திற்கு நீர் வாக்குமூலம் கொடுக்கும்போது இப்போது கூறப்பட்ட சிலவற்றை கூறியிருக்க வில்லை?— நான் அப்படி வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்பதை மறுக்கிறேன்.

நீதவான்: நீ கொடுத்த வாக்குமூலத்தை எழுதியபின் வாசித்துக்காட்டவில்லையா?—

சாட்சி: இல்லை, வாசித்துக் காட்டவில்லை. ஆனல் அதில் கையெழுத்துப் போடச் சொன்னபடியால்கையெழுத்து வைத்தேன்.

சட்: உமது மகள் காஞ்சனவதியை 2, 3 நாட்களின்பின ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தீர்?—ஆம்:

சட்: நீர் மகளை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்ப்பதற்கு முன் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்துவிட்டீர்?— ஆம்.

சட்: ஆஸ்பத்திரியில் காஞ்சனவதியுடன் கதைத்தீர்?— ஆம். ஆனல் இக்கொலைச் சம்பவத்தைப் பற்றிக் கதைக்கவில்லை. காரணம் இச்சம்பவத்தைப்பற்றி அப்போது கதைத்தால் அவருடைய மனநிலை பாதிக்கப்படுமென்பதனால்.

சாட்சியை சட்டத்தரணி எம். வேலும்மயிலும் மறுவிசாரணைசெய்தார். அப்போது சாட்சி தெரிவித்ததாவது:

குறுக்குவிசாரணையின்போது என்னை எருகளவெடுத்த குற்றச் சாட்டுச்சம்பவம்பற்றி குறிப்பிடப்பட்டது. நான் எருகளவெடுதத குற்றச் சாட்டில் குற்றவாளியா என்று இவ்வழக்கில் எதிரிகளின் சட்டத்தரணி கேட்டபோது நான் ஆம் என்று சொன்னேன். ஆனல் உண்மையில் நான் எரு களவெடுக்கவில்லை. என்னையும் ஒரு எதிரியாகக் கொண்டுவந்தனர்.

அவ்வழக்கில் எனக்கு 50 ரூபா குற்றம்போடப்பட்டது. நான் சுந்தரம் கதிரவேலுவைச் சுடவில்லை அவ்வழக்குச் சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தேன். பின் அவ்வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனக்குத் துவக்குப்பிடிக்கவும் தெரியாது. துவக்கால் சுடவும் தெரியாது. இக்கொலைச் சம்பவங்கள் 25—7—81 இரவு பன்னிரண்டரை மணிபோல் நடைபெற்றது.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

### 3 இடங்களில் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு என்னும் வாசகமும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற அமைப்பு ஒன்றின் பெயரும் காணப்பட்டது. இதனையும் காங்கேசன்துறைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சந்தியில் காணப்பட்ட உதய சூரியன் கொடியொன்றையும் பொலிசார் கைப்பற்றினர். எவரும் இது தொடர்பாக கைதுசெய்யப்படவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலை பேசி: 7707, 389, 8126.